# கோமான் நபியின் அகமியங்கள்

வல்ல நாயனைப் புகழ்ந்து அன்னாலாரின் மீதும் அவர்களது
ஆலு அஸ்ஹாபுகள், நல்லோர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும்
கூறியவனாய் இச்சிறு ஆக்கத்தை தொடங்குகின்றேன்.

அல்லாஹ் சுப்ஹானஹு தஆலா கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இப்பாரின் பரிபூரன ஜோதியாய் அருளினான். அவர்கள் படைப்பாலும், பண்பாலும், குணத்தாலும், அறிவாலும் நிறைவானவர்களாகவே காணப்பட்டார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் அழகைப்பற்றி அவர்களுடைய தோழர்களில் ஒருவரான ஹஸ்ஸான் இப்னு ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வர்ணிக்கும் பொழுது

وأحسن منك لم تر قط عيني وأجمل منك لم تلد النساء
خُلقت مبرأً من كل عيب كأنك قد خُلقت كما تشاء

“உங்களை விட அழகான ஒன்றை என் கண்கள் கண்டதே இல்லை
உங்களை விட அழகானதோர் குழந்தையை எந்த தாயும் ஈன்றதில்லை நீங்கள் எவ்வித குறையுமின்றி நிறைவாய் படைக்கப்பட்டுள்ளீர்கள் நீங்கள் எவ்வாறு படைக்கப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டீர்களோ அவ்வாறே படைக்கப்பட்டிருக்கிறீர்கள்”
(மவாஹிபுல் லதுன்னிய்யாஹ்) என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களைப் பார்த்து விழிக்கின்றார்கள். இவ்வாறு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது படைப்பு அழகாலும் அமைப்பாலும் நிறைவாய் காணப்பட்டது.
மேலும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த அறிவைப் பற்றி இமாம் பூஸரி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் வர்ணிக்கும் பொழுது பின்வருமாறு கூறுகின்றார்கள்

فَاقَ النَّبِيِّينَ فِي خَلْقٍ وَفِي خُلُقٍ
وَلَمْ يُدَانُوهُ فِي عِلْمٍ وَلاَ كَرَمِ
وَكُلُّهُمْ مِنْ رَسُولِ اللهِ مُلْتَمِسٌ
غَرْفًا مِنَ البَحْرِ أَوْ رَشْفًا مِنَ الدِّيَمِ

“இவ்வுலகில் படைக்கப்பட்ட முதல் மனிதனான ஆதம் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் முதல் இவ்வுலகில் பிறக்கவிருக்கும் கடைசி மனிதன் வரைக்கும் அழகு, அறிவு ஆகிய இந்த இரண்டு விடயங்களில் இருந்தும் எந்த ஒருவருக்கும் பரிபூரணத்துவம் வழங்கப்படவில்லை”.

இவ்வுலகில் உள்ள அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவு, கடல், நீரில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு துளி என்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அறிவு, கடலைப் போன்று என்றும் எடுத்தியம்புகிறார்கள்.

ஆகையால் தான் நபி ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம் அவர்கள்
“நான் அறிவெனும் பட்டனம், அலி ரழியல்லாஹு அன்ஹு
அதன் வாயில் எனக் குறிப்பிட்டார்கள். இவ்வாறு நபிகள்
நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் படைப்பாலும் அறிவாலும்
பூரணத்துவம் பெற்றவார்களாக காணப்பட்டார்கள். மாத்திரமன்றி அறிவும் அழகும் நிறைந்து
காணப்பட்ட நபிகள் கோமான் அவர்கள் குணத்தாலும் உதாரண புருஷராகத் திகழ்கிறார்கள்.
அவர்களது நடத்தையில் காணப்பட்ட பணிவும் தன்னடக்கமுமே அவர்களது போதனைகளும்
சிந்தனைகளும் சமுகத்தில் வேறுன்றக் காரணமாயின எனலாம். ஒரு மனிதனின் அழகும்
அறிவும் பிறர் மனதில் அழகாக தெரிவதும் அவலட்சணமாக தெரிவதும் அவன் கொண்டிருக்கும்
நண்ணடத்தைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.
அந்தவகையில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பூரணத்துவமிக்க
அழகு, அறிவு என்பவற்றோடு நற்குணத்தின் அடித்தளமாகக் காணப்பட்டார்கள். ஆகையால்தான்,
நபியவர்கள் நுபுவ்வத்திற்கு முன்பிலிருந்தே உண்மை பேசுபவர்களாகவும், நம்பிக்கை
நாணயமுள்ளவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

அன்னை ஆயிஸா சித்தீகா(ரழி) அவர்கள் நாயகத்தின் நற்குணத்தைப் பற்றி சொல்லும் பொழுது
**كان خلقه القرآن** “நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களது குணங்கள்
அனைத்தும் அல்குர்ஆனாகவே இருந்தது.” என்று பறைசாற்றுகிறார்கள். அல்குர்ஆனை மிஞ்சிய
போதனைகளும் சிந்தனைகளும் இவ்வுலகத்தில் இருக்கமுடியுமா?. புனித திருக்குர்ஆனில் பிறருடன்
எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். தங்களது மனைவி மக்களை எவ்வாறு நடாத்த வேண்டும்
மற்றும் அயலவர்களுக்கு எவ்வாறான உரிமைகளை வழங்க வேண்டும் போன்ற அனைத்து
விதமான நற்பண்புகளும் விபரிக்கப்பட்டிருக்க நாயகத்தின் பண்புகள் அல்குர்ஆனாக இருந்தது
என்றால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்குர்ஆனின்
நடைமுறை விளக்கமாக வாழ்ந்துகாட்டினார்கள் என்றல்லவா பொருள்கொள்ளமுடிகிறது.
பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது மனைவிமாகளுடன்
தோழர்களுடன், ஏனைய சமுகத்தாகளுடன், தங்களது பணியாளர்களுடன் நடந்துகொண்ட
முறைகளில் இவ்வுலகத்தாருக்கு அழகிய முன்மாதிர இருக்கிறது. ஆதனைத்தான் இறைவன்

لقد كان لكم في رسول الله **أسوة حسنة**

“நிச்சயமாக உங்களுக்கு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் சிறந்த
முன்மாதிரி இருக்கின்றது” (அல் அஹ்ஸாப்: 21) என அல் குர்ஆன் பிரஸ்தாபிக்கின்றது.

தீன் பணி என்ற பாரிய பொறுப்பிற்கு அப்பால் பிறருடைய கஷ்ட நஷ்டங்களில் பங்கெடுத்து ஆறுதல்
சொல்ல கூடியராகவும் அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரியக்கூடியவர்களாகவும்
காணப்பட்டார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
அவர்கள் ஒரு போதும் கடுகடுத்த முகத்துடன் இருக்க மாட்டார்கள்.
அவர்கள் சிரித்தும் வாழ்ந்தார்கள். மற்றவர்களை சிரிக்கச் செய்தும்
வாழ்ந்தார்கள் என்று ஹதீஸ்களின் வாயிலாக
எங்களுக்கு புலனாகிறது.

ஒரு மனிதன் நல்லவன் என்றும் கெட்டவன் என்றும் நிர்ணயிக்கப்படுவது மற்றவர்களுடன் நடந்து கொள்ளும் விதத்தைப் பொறுததே தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் அழகிய நற்பண்புகளைக் கற்று அதன்படி நடந்து அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். மேலும் எல்லாம் வல்ல இறைவன் நம் அனைவரையும் நற்குணமுடையவர்களாகவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் நற்குணங்களில் இருந்தும் நற்குணம் பெற்றவர்களாகவும் வாழ்ந்து மடிவதற்கு அருள்பாளிப்பானாக.......!

ஆமீன்...!

ஆக்கம்
அல் ஹாபிழ் மௌலவி நுவைஸிர் கௌஸி
**B.A. Hons. (SEUSL)**
விரிவுரையாளர்: அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ்

